**செ.கு.எண் :34** **நாள் : 07.04.2022**

**இன்று (7.4.2022) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

உலகளாவிய முறையில் காலணிகள் தயாரிப்பு உற்பத்தியில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தை பெற்றிருக்கக் கூடிய தைவான் நாட்டைச் சேர்ந்த ஹாங் ஃபூ (Hong Fu) நிறுவனம், இன்றைக்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முன்னிலையில் தமிழ்நாடு அரசோடு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டிருக்கிறது. அந்தக் குழுமத்தின் உடைய தலைவர் திரு.T.Y.சாங் (Chang) அவர்கள் இங்கே வந்து அவருடைய முன்னிலையிலும் இந்த ஒப்பந்தம் இன்று மாலையிலே கையெழுத்தாகி இருக்கிறது.

Hong Fu நிறுவனம் விளையாட்டுக் காலணிகள் உற்பத்தி, வடிவமைத்தல், தயாரித்தல், விற்பனை செய்தல் போன்ற துறைகளில் உலக அளவிலே நைக் (Nike), கான்வர்ஸ் (Converse), பூமா (Puma) போன்ற பல்வேறு பெரிய பிராண்டுகளுக்கு விளையாட்டுக் காலணிகளை தயாரித்துக் கொடுக்கக் கூடிய அளவிலே இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் காலணிகள் உற்பத்தியை செய்வதற்கு, தொழிற்சாலையை துவங்குவதற்கு, வரக்கூடிய மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில் ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் இந்தத் தொழிற்சாலை துவங்குவதற்கும், அதன் வாயிலாக ஏறத்தாழ 20 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், அந்த வேலைவாய்ப்பிலும் மிகப்பெரிய அளவில் பெண்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கக் கூடிய அளவிலும் தொழில் முதலீடுகளை செய்வதற்கான ஒப்பந்தம் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இது ஒரு மிக முக்கியமான ஒரு மைல் கல்லாக இன்றைக்கு அமைந்து இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு திண்டிவனத்தில் இத்தகைய காலணி உற்பத்தி தொழிற்சாலை ஒன்றுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார். செய்யாறு SEZ டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் மூலமாக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமும், அந்த வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, தமிழ் நாட்டிலே ஒரு மிகப்பெரிய வேலை வாய்ப்பிற்கான ஒரு நல்ல முதலீடு அந்த முதலீட்டிற்கான ஒரு மிகப்பெரிய தைவான் நிறுவனம் இன்றைக்கு வந்திருக்கிறார்கள். இந்த நிறுவனத்திற்கு தைவான், சீனா, வியாட்நாம் போன்ற இடங்களிலும் பல்வேறு தொழிற்சாலைகள் இங்கு இருக்கிறது.

இன்று தமிழ்நாட்டின் வட பகுதி முழுவதும் அவர்கள் பல இடங்களை பார்வையிட்டிருக்கிறார்கள், நாளைக்கு மேலும் சில இடங்களை பார்வையிட இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் பார்வையிட்ட பிறகு எந்த இடத்தில் அந்த தொழிற்சாலை அமைந்தால் சரியாக இருக்கும் என்பதை முடிவு செய்யலாம். அதற்கு முன்பாக இந்த முதலீடு என்பது மிகப் பெரிய ஒரு முதலீடு பெருமளவிலே வேலைவாய்ப்பினை உருவாக்க கூடிய ஒரு ஆயிரம் கோடி ரூபாய்கான முதலீடாக இந்த முதலீடு அமைந்திருக்கிறது என்பதை நான் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொண்டு, இந்த முதலீட்டாற்கான ஒப்பந்தங்கள் இன்றைக்கு நான் முதலில் குறிப்பிட்டவாறு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முன்னிலையிலும், இந்த Hong Fu நிறுவனத்தில் குழுமத்தினுடைய தலைவர் திரு.சாங் அவர்களுடைய முன்னிலையிலும் நம்முடைய அரசினுடைய உயர் அதிகாரிகள் அவர்களுடைய தரப்பில் வந்திருக்கக்கூடிய அலுவலர் பெருமக்கள் முன்னிலையிலும்

இன்று மாலையிலே கையெழுத்தாகியிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி:** எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்கும்?

**பதில்:** இந்த தொழிற்சாலையின் மூலமாக ஏறத்தாழ 20 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த 20 ஆயிரம் பேரில் பெரும்பான்மையானவர்கள் பெண்களாக இருப்பார்கள். இப்போது போச்சம்பள்ளியில் பர்கூரில் இருக்கின்ற தொழிற்சாலை, செய்யாறு தொழிற்சாலை, திண்டிவனத்தில் 6000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிற தொழிற்சாலையில் மிகப் பெரும்பான்மையான அளவில் மகளிருக்கான வேலைவாய்ப்பு கிடைக்கிறது. அதையொட்டி இந்த தொழிற்சாலையிலும், பெண்களுக்கான வேலைவாய்ப்பு பெரிய அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

**கேள்வி** : ஏற்கனவே வட மாவட்டங்களில் தண்ணீர் பிரச்சனை இருக்கிறது இதனால் பாதிப்பு ஏற்படுமா?

**பதில்:** நீங்க ரெண்டு விஷயம் இருக்கிறது அதாவது காலனிகள் உற்பத்தி நிறுவனங்கள் (Footwear Industry) இரண்டு விதமாக இருக்கும். ஒன்று Leather based Industries, இரண்டாவதாக Non-leather based Industries. திண்டிவனத்தில் துவக்கப்பட்டிருக்கக்கூடிய தொழிற்சாலையும் Non-leather based Industry. எனவே, இந்த காலணி உற்பத்தி நிறுவனமும் Non-leather based Industry என்பதால் தண்ணீர் பிரச்சனையாக இருக்காது.

**கேள்வி:** பெரும்பாலும் எந்த இடத்தில் அமைக்க திட்டம் இருக்கிறது.

**பதில்** : இன்றைக்கு சென்னைக்கு அருகில் இருக்கும் திருவள்ளூர் போன்ற இடங்களைப் பார்த்திருக்கிறார்கள், நாளைக்கு வேறு பல இடங்களையும் பார்வையிட உள்ளார்கள். ஆகவே, ஒரு இடத்தை மட்டும் அவர்கள் பார்க்கவில்லை, ஏழு, எட்டு

இடங்களைப் பார்க்கிறார்கள். ஒரு தொழிற்சாலை வருகிற போது அந்தத் தொழிற்சாலை உடைய நில அமைப்பு, இணைப்பு சாலைகள், துறைமுகம் இணைப்பு, அங்கு கிடைக்கக்கூடிய மின்சாரம் போன்ற வசதிகள், அங்கே கிடைக்கக்கூடிய தொழிலாளர்களுக்கான வசதிகள் போன்ற பல காரணிகளை அவர்கள் ஆராய்கிறார்கள். இது போன்ற மிக சாதகமான சூழ்நிலை இருக்கக்கூடிய பல பகுதிகளில் தமிழ்நாட்டில் இருக்கிறது. அப்படி இருக்கக்கூடிய ஏதேனும் ஒரு இடத்தை அவர்கள் தேர்வு செய்த பிறகு மிக விரைவில் அந்தத் தொழிற்சாலை அங்கு ஆரம்பிக்கப்படும்.

**கேள்வி**: வேலைவாய்ப்பு அந்த மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் கிடைக்குமா? அல்லது தமிழ்நாடு முழுவதும் உள்ளவர்களுக்கு கிடைக்குமா?

**பதில்:** ஓரிடத்தில் தொழிற்சாலை ஆரம்பிக்கிறார்கள் என்றால், அதை சுற்றி இருக்கிறவர்களுக்கு மட்டும் தான் ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து எடுப்பார்கள். பொதுவாக Foot wear industry என்பது கிட்டத்தட்ட அறுபது, எழுபது கிலோ மீட்டரில் எடுக்கிறார்கள். உதாரணத்திற்கு, போச்சம்பள்ளியில் தொழிற்சாலை இருக்கிறது என்றால், மதுரையிலிருந்து தொழிலாளர்களை எடுக்கமாட்டார்கள். அதுபோல எந்த இடத்தில் தொழிற்சாலையை அமைக்கிறார்களோ அந்த குறிப்பிட்ட பகுதியிலிருந்து அந்த தொழிலாளர்களை எடுத்துக் கொள்ளலாம்.

- - - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**